4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

சாட்சியின் சாட்சியம் திரு. **M.** நம்பிராஜன், பி.ஏ., பி.எல்., 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

**MCOP.No.35 / 2022** நாள்: **02.07.2025** ம.சா.1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | **கமலாத்தாள்** | தொழில் | : | இல்லதரசி |
| த/பெ | : | செல்வராஜ் | கிராமம் | : | ஜோதிபாளையம் |
| வயது | : | 55 | தாலுகா | : | உடுமலைப்பேட்டை |
| | | | மாவட்டம் | : | **திருப்பூர்** |

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,

முதல் விசாரணை -

நான் இந்த வழக்கில் மனுதாரர் ஆவேன். இந்த வழக்கில் எனது சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதை பதிவு செய்து கொள்ள வேண்டுகிறேன்.

30.10.2020 தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை நகல் ம.சா.ஆ.1 ஆகும். 01.11.2019 தேதியிட்ட உடல் கூராய்வு அறிக்கை நகல் ம.சா.ஆ.2 ஆகும். குற்ற எண்.592/2019 –ன் மாதிரி வரைபடம் நகல் ம.சா.ஆ.3 ஆகும். மேற்படி வழக்கில் மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் நகல்கள் ம.சா.ஆ.4, 5 மற்றும் 6 ஆகும். மேற்படி வழக்கில் இறுதி அறிக்கை நகல் ம.சா.ஆ.7 ஆகும். இறந்துபோன பாலசுப்பிரமணியனின் இறப்பு சான்றிதழ் நகல் ம.சா.ஆ.8 ஆகும். பாலசுப்பிரமணியனின் வாரிசு சான்றிதழின் நகல் ம.சா.ஆ.9 ஆகும். இறந்துபோன செல்வராஜின் இறப்பு சான்றிதழின் நகல் ம.சா.ஆ.10 ஆகும். இறந்து போன செல்வராஜின் வாரிசு சான்றிதழின் நகல் ம.சா.ஆ.11 ஆகும். எனது ஆதார்

அட்டையின் நகல் ம.சா.ஆ.12 ஆகும். எனது வங்கி கணக்கு புத்தகத்தின் முன் பக்க நகல் ம.சா.ஆ.13 ஆகும்.

குறுக்குவிசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

Sd/–M.Nambirajan.
4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.